IHP
INSTITUTE FOR HEALTH POLICY

72, Park Street, Colombo 2, Sri Lanka
Tel: +94 11 231 4041/2/3/5 Fax: +94 11 231 4040
e-mail: info@ihp.lk web: www.ihp.lk twitter: @ihplk

## PRESS RELEASE

**திகதி வரை தடையாணை**

திகதி : 22 August 2023
நேரம் : 12:01 AM Sri Lanka Time

**மேலும் தகவல்களுக்கு அணுகவும்**

டல்ரீன் பாத்லாட்
மின்னஞ்சல்: dalreen `at’ ihp.lk

**பிரதான ஆராய்ச்சியாளருடன் தொடர்புகொள்ள**

மருத்துவர். ரவி ரன்னன்-எலிய
மின்னஞ்சல் : ravi `at’ ihp.lk Twitter: @ravirannaneliya

# எதிர்வரக்கூடிய ஜனாதிபதி தேர்தல் பற்றிய கணிப்பில் ஜனா. ரணில் விக்ரமசிங்கவிற்கான ஆதரவு தொடர்ந்து அதிகரித்து வருகின்றது

*IHP ஜூலை 2023 ஜனாதிபதி தேர்தல் வாக்காளர் தீர்மானம் புதுப்பிப்பு*

IHP-ன் ஜூலை 2023 ஜனாதிபதி தேர்தல் வாக்காளர் தீர்மானம் பற்றிய இலங்கை கருத்துக் கணிப்பு ஆய்வின்(SLOTS) MRP மதிப்பீடுகள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு வாக்களிக்கக்கூடியவர்களின் ஆதரவு தொடர்ச்சியான அதிகரிப்புடன் 19% ஆனதை உறுதிபடுத்துகின்றன.

ஆனால் 39% உடைய என்.பி.பி./ஜே.வி.பி. தலைவர் அ. கு. திஸாநாயக மற்றும் 33% உடைய எஸ்.ஜே.பி. தலைவர் சஜித் பிரேமதாசவைவிட அவர் மிகவும் பின் தங்கிய நிலையில் இருக்கின்றார். மதிப்பீடுகளின் பிழை விளிம்பு 1-4%.




\முந்தைய மாதங்களின் போக்குகள் ஜூலை மாதத்திலும் தொடர்கின்றன, ஆனால் சமீபத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அதிகரிக்கும் ஆதரவினை அன்மித்த தரவுகள் பலமாக ஆதரிக்கின்றன. அவருக்கான ஆதரவில் இந்த உயர்வு எஸ்.ஜே.பி. தலைவர் சஜித் பிரேமதாசவின் இழப்பில் இருந்து இருக்கலாம் என்று மதிப்பீடுகள் அனுமானிக்கின்றன.



## தொடர்புடைய அறிக்கைகள்


Institute for Health Policy, March 2023, "IHP MRP Voting Intentions Update February 2023: Voters consolidate around the NPP/JVP, SJB and ITAK, with NPP/JVP taking a clear lead", SLOTS Report #2023-06
Available at: https://www.ihp.lk/publications/docs/SLOTSReport202306.pdf

Institute for Health Policy, April 2023, "AK Dissanayake (48%) leads Sajith Premadasa (37%) in a potential Presidential Election. IHP Presidential Election Voting Intentions Update March 2023", SLOTS Report #2023-12
Available at: https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20230420.pdf

Institute for Health Policy, May 2023, "Support for AK Dissanayake slips to 45%, but still leads Sajith Premadasa (37%). IHP Presidential Election Voting Intentions Update April 2023", IHP Press Release #2023-16.
*Available at:* https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20230526.pdf

Institute for Health Policy, June 2023, "Pres.Ranil Wickremesinghe & SLPP continue to gain support in May. IHP Presidential Election Voting Intentions Update May 2023", IHP Press Release #2023-19.
*Available at:* https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease202306302.pdf

Institute for Health Policy, July 2023, "Little change in Presidential voting intention in June 2023:AKD 40%, Sajith 35%, Ranil 15%. IHP/SLOTS MRP Presidential Election Voting Intention Update June 2023", IHP Press Release #2023-23.
*Available at:* https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20230728.pdf


## IHP பற்றி

IHP கொழும்பு, இலங்கையில் உள்ள சுயாதீனமான மற்றும் கட்சிசார்பற்ற ஆய்வு மையம். SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளர் மருத்துவர் ரவி ரன்னன்-எலிய ஆவார். இவர் பொது கருத்துக்கணிபுகளில் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றதோடு மூன்று தசாப்தங்களாக பல்வேறு ஆய்வுகளை நடத்திவருகிறார்.

## முறை

முன்தேர்வு இல்லாமல் எழுமாற்றமாக தேர்ந்தெடுத்த கைப்பேசி எண்களின் மூலம் தொடர்புகொண்டு சேர்க்கப்பட்ட வயதுவந்தவர்களின் (18 வயதிற்கு மேற்பட்டவர்கள்) மாதிரியில் இருந்தும் மற்றும் எழுமாற்ற மாதிரி தெரிவு முறையின் மூலம் முறைப்படி தெரிவு செய்யப்பட்ட ஒர் தேசிய பதிலளிப்பவர் பேனலிலிருந்தும் நேர்காானல்களை SLOTS ஒருங்கிணைக்கிறது. குறிப்பிட்ட மாதத்தில் வாக்களிப்பை மதிப்பிட

அனைத்து SLOTS நேர்காணல்களின் தரவினையும் முழுமையாக பயன்படுத்தி, வாக்களிப்பு தீர்மானத்தை Multilevel Regression மற்றும் Post-Stratification (MRP) தழுவிய முறை கொண்டு IHP மதிப்பீடு செய்கின்றது. உடன் தொடர்பு முறையின் நிச்சயமற்ற தன்மை மல்டிபல் இம்ப்யூடேஷன்(multiple imputation) என்னும் முறையின் மூலம் கருதப்படுகின்றது.

ஜூலை 2023க்கான MRP மதிப்பீடுகள் ஜூலை 2023 ல் நடத்தப்பட்ட 466 நேர்காணல்கள் மற்றும் அக்டோபர் 1 2021- ஆகஸ்ட் 13 2023 வரை நடத்தப்பட்ட 12,269 நேர்காணல்களின் மொத்தத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்டது. அ.கு.திஸாநாயக மற்றும் சஜித் பிரேமதாஸவுக்கு பிழை விளிம்பு 2-4% எனவும், மேலும் மற்ற இரண்டு உத்தேச வேட்பாளர்களுக்கு 1–3% என்றும் மதிப்பிடப்பட்டது. தேசிய சனத்தொகையின் வயது, பாலினம், இனக்குழு, சமூகபொருளாதார நிலை, கல்வி, இடம், மற்றும் 2019 ஜனாதிபதி மற்றும் 2020 பொது தேர்தல் வாக்களிப்போடு மாதிரி பொருந்துமாறு அனைத்து மதிப்பீடுகளும் சரிசெய்யப்பட்டன.

## நிதியுதவி

இலங்கையில் நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை, ஐக்கிய ராஜியத்தின் உடல்நலம் மற்றும் பராமரிப்பு ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனம் (UK NIHR), ஆசியா மன்றம்(The Asia Foundation) மற்றும் ஏனையோர் SLOTS ஆய்விற்கு நிதியுதவி அளித்துள்ளனர். ஆனால் ஆய்வின் வடிவமைப்பிலோ, பகுப்பாய்விலோ மற்றும் கண்டுபிடிப்புகளின் பொருள்விளக்கத்திலோ ஆதரவாளர்கள் பங்கு வகிக்கவில்லை. மேலும் விவரமான தரவுகள் மற்றும் முடிவுகளை பெற விரும்பும் நபர்கள் IHP உடன் தொடர்பு கொள்ளலாம்.